**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 40/2025**

**வழக்கு சாட்சி PW.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கவிதா** | தொழில் | : கூலிவேலை |
| தகப்பனார் பெயர் | : சோலை | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : சாமியார் மூப்பனூர் | இனம் | : பெண் |
| தாலுகா | : நிலக்கோட்டை | வயது | : 45/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 07.09.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் சாமியார் மூப்பனூர் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியைத் தெரியாது . வழக்கின் புகார்தாரரைத் தெரியாது . தேதி நினைவில்லை. சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு நான் மருமலை எஸ்டேட்டில் வேலையை முடித்து இரவு 07.00 மணியளவில் வேனில் சுமார் 30 நபர்கள் கே .சி.பட்டி செல்லவேண்டி வேனில் கிளம்பினோம் . வேனை யார் ஓட்டினார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது . வேனின் பதிவெண் விபரம் எனக்குத் தெரியாது . சிறிது நேரம் கழித்து எங்களது வாகனம் கே .சி.பட்டி 3 வது பென்ட்டில் பள்ளத்திற்குள் கவிழ்ந்து விட்டது . எதனால் வேன் கவிழ்ந்தது என்ற காரணம் எனக்குத் தெரியாது . வேன் பள்ளத்தில் விழுந்ததில் எனக்கு தலையில் அடிப்பட்டு நான் சுயநினைவை இழந்துவிட்டேன். நான் சுயநினைவு வந்து எழுந்து பார்த்தபோது நான் வத்தலக்குண்டு காட்டாஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தேன். நான் காட்டாஸ்பத்திரியில் இரண்டு வாரங்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் .

மேலும் எங்கள் வேனில் வந்த ஒரு நபர் இறந்துவிட்டதாக பின்னர் விசாரித்து தெரிந்துகொண்டேன் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையின்போது சொன்னேன் என்றால் சரிதான்.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.09.07 18:11:35 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No. 40/2025**

**வழக்கு சாட்சி PW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **பாண்டியம்மாள்** | தொழில் | : கூலிவேலை |
| தகப்பனார் பெயர் | : | கணவர் பெயர் | : சென்றாயன் |
| கிராமம் | : சாமியார் மூப்பனூர் | இனம் | : பெண் |
| தாலுகா | : நிலக்கோட்டை | வயது | : 43/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 07.09.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் சாமியார் மூப்பனூரி வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. தேதி நினைவில்லை. சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு மருமலை எஸ்டேட்டில் வேலையை முடித்துவிட்டு வேனில் நானும், என்னுடன் எங்கள் ஊரைச் சேர்ந்த 18 நபர்களும் கிளம்பினோம். கே.சி.பட்டி 3 வது பெண்ட் அருகே மாலை 06.00 மணிக்கு வந்தபோது நாங்கள் சென்ற வாகனம் வளைவில் கவிழ்ந்து விட்டது . எதனால் வாகனம் கவிழ்ந்து என்ற விபரம் எனக்குத் தெரியாது . எனக்கு மேற்சொன்ன விபத்தில் இடது பக்கம் முழுவதும் காயம் ஏற்பட்டு எனக்கு இடது தோள்பட்டையில் முறிவு ஏற்பட்டு பிளேட் வைத்துள்ளார்கள். விபத்திற்குள்ளான என்னை முதலில் பெரும்பாறை மருத்துவமனைக்கு கொண்டுசென்று , பிறகு அங்கிருந்து வத்தலக்குண்டு காட்டாஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு கொண்டுசென்றார்கள். நான் காட்டாஸ்பத்திரியில் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் . மேற்சொன்ன விபத்தில் குறும்பபட்டியைச் சேர்ந்த ஒரு பையன்

இறந்துவிட்டதாக பின்னர் தெரிந்துகொண்டேன் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான் . மேற்சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையின்போது சொன்னேன் என்றால் சரிதான் . நான் விபத்து சம்பந்தமாக நஷ்டஈடு கோரி தனியாக வழக்கு தொடுத்துள்ளேனா என்றால் தொடுத்துள்ளேன்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.09.07 18:11:42 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC.No. 40/2025**

**வழக்கு சாட்சி PW.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சின்னத்துரை** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : காந்தி | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : குரும்பபட்டி, வத்தலக்குண்டு | இனம் | : ஆண் |
| தாலுகா | : நிலக்கோட்டை | வயது | : 40/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 07.09.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் குரும்பபட்டியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது . சுமார் 5 வருடங்களுக்கு முன்பு கே.சி.பட்டியில் உள்ள ஒரு எஸ்டேட்டில் வேலையை முடித்து குரும்பபட்டியை நோக்கி மினி வேன் ஒன்று கிளம்பியது, அதில் நானும் , என்னுடன் சுமார் 25 நபர்களும் பயணம் செய்தார்கள் . மேற்சொன்ன வாகனம் குப்பம்மாள்பட்டியை தாண்டி ஒரு திருப்பத்தின் அருகே வந்த போது நாங்கள் சென்ற வாகனமானது பக்கவாட்டில் இருந்த பள்ளத்தில் கவிழ்ந்துவிட்டது. நான் வாகனத்தின் முன்பகுதியில் அமர்ந்திருந்தேன். நாங்கள் சென்ற வாகனம் பள்ளத்தில் விழுந்து பிரண்டுவிட்டது. விழுந்ததில் மூச்சு திணறல் ஏற்பட்டது . பின்னர் என்னை மற்றவர்கள் மீட்டுவிட்டார்கள் . வாகனத்தில் தடைத்திறன் முறையாக செயல்படாத காரணத்தால் விபத்து நேர்ந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன விபரத்தை தான் போலீசார் விசாரணையின்போது சொன்னேன் என்றால் சரிதான் . நான் விபத்து சம்பந்தமாக நஷ்டஈடு கோரி தனியாக வழக்கு தொடுத்துள்ளேனா என்றால் தொடுத்துள்ளேன்.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.09.07 18:11:48 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.